இருப்பதால், அமிர்த்தியை விஸ்தரிக்கின்ற பணியிலேயே இந்த ஏலகிரி மல்லயையும் இணைத்தால், மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக இரண்டும் அமையும், ஆகவே அதைச் செய்ய அரசு ஆலோசிக்குமா என்பதை என் வேண்டுகோளாக அல்ல—இரண்டையும் இணைக்க வேண்டும் என்கிற என் கோரிக்கையை—அரசு ஏற்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அமிர்த்தியை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு, ஏலகிரியை விஸ்தரிக்க இயலுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 212 —திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கூவம் மற்றும் பக்கிங்ஹாம் நதிக்கரையில் நிழல் தரும் மரங்களையும் அழகுதரும் மரங்களையும், ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களில், வனத் துறையினரால் நடுவதாக முடிவெடுக்கப்பட்டு 1982-83 ஆம் ஆண்டில் கூடுமானவரை அதிக இடங்களில் மரங்கள் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீதமுள்ள பகுதிகளில் 1983-84 ஆம் ஆண்டில் மரங்கள் நடப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் நடப்பட்டுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா ? அத்தோடு அப்படி நடுகிற மரங்கள் அரசுக்கு வருவாயைத் தருகிற வகையில் பயன் தரும் மரங்களை வைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகின்ற திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்திலே அவற்றில் பல பகுதிகள் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்ற காரணத்தால், பொதுப்பணித் துறை அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கையிலே இறங்க வேண்டும் என்று

கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு விரைவிலே ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகிறதோ அதையொட்டி மரம் நடுகின்ற பணியும் தீவிரப்படுத்தப்படும், மேலும் இது நகரத்திற்கு மத்தியிலே அமைகின்ற காரணத்தால் பலன் தரும் மரங்களை வளர்ப்பது என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆகவே மலர்கள் பூக்கின்ற அழகு தரும் மரங்களையும் நிழல் தரும் மரங்களையும் நடலாம் என்ற அந்த அடிப்படையிலே அந்த மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூவம் நதிக்கரை ஓரத்தில் என்னென்ன விதமான மரங்களை நட இருக்கிறீர்கள்? அதற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டது போன்று நிழல் தரும் மரங்களையும், மலர் பூக்கின்ற மரங்களையும் நடத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்ற விவரம் தான் இருக்கின்றது. ஆகவே அந்த ஜாதி மரங்கள்தான் அங்கே நடப்படும் என்று தெரிகிறது; ஆனால் எப்படிப்பட்ட மரங்கள் என்பதற்கான விவரம் இல்லை. மேலும் அங்கேயுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்ற சூழ்நிலையில் மொத்தம் எவ்வளவு மரங்கள், எவ்வளவு தூரத்திற்கு நடப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறதே தவிர அதற்கு எவ்வளவு தொகை செலவழித்து நடவேண்டும் என்பதை அடுத்த ஆண்டிலேதான் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதிக்கரையில் நடப்படுகின்ற மரங்களை வனத்துறை நடுமா? கூவம் நதிக்கரை பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானதா? அல்லது வனத்துறை பொதுப்பணித்துறையிடமிருந்து அந்த இடத்தைக் கையகப்படுத்தி இருக்கின்றதா? அல்லது வனத்துறைக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலங்கள் அரசின் நிலங்கள் அது பொதுப்பணித்துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றது. வனத்துறையிடத்திலே மரம் நடுவதற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அது பொதுப்பணித்துறையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட இடங்கள் தான். வனத்துறை மரம் நடுகின்ற பணியை நிறைவேற்றும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாலே கேட்ட கேள்வி அதற்கு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பது திட்டங்கள் போடப்படுகின்ற நேரத்தில் சுமார் 6200 வெவ்வேறு ஜாதி மரங்களை 18 கிலோ மீட்டர் நீளத்திற்கு கூவம் நதிக்கரையில் நடுவதற்கு 6.55 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று ஒரு திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிழல் தருகின்ற மரங்கள் நடப்படுகின்றது என்றால் அவை பெரிய மரங்களாகத்தான் இருக்கும். எனவே அந்த மரங்களின் சருகுகள் அந்த நதியிலே விழுந்து மேலும் துர்நாற்றம் உடைய கூவம் நதியாக ஆக வாய்ப்பு இருக்கின்றது. எனவே அங்கே சிறிய மரங்களை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நிழல் தரும் மரங்கள் என்று சொல்லுகின்றபோது அவை எந்த அளவிற்கு பெரிய மரங்களாக வளரும் என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால், அப்படிப்பட்ட மரங்களின் சருகுகள் நீரிலே விழுந்து அழுகி துர்நாற்றம் ஏற்படுகின்ற வகையில் அமையாது மரம் நடுகின்ற திட்டமே துர்நாற்றத்தைப் போக்குவதற்காகத் தான் உருவாக்கப்படுகின்றது.

திரு. ஆர். வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதியிலே சுற்றுலாத்துறையின் மூலம் படகு விடுகின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மரம் நடுகின்ற திட்டத்தை பற்றி மட்டும்தான்.

புதுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி, திராபிடுங்கி விவசாயப் பண்ணைகள்.

*வினா எண். 213 — திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான், திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைத் தொகுதியில் உள்ள வெள்ளாள விடுதி. திராபிடுங்கி ஆகிய இடங்களில் உள்ள விவசாயப் பண்ணைகளை அரசு மூடிவிட உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தின் நடவடிக்கைகள் 31-8-1982 முதல் நிறுத்தப்பட்டுவிட்டதால், புதுக் கோட்டை தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி பண்ணை எண்ணெய் வித்துக்கள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. திராபிடுங்கி பண்ணை வருவாய்த்துறைக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.